# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத் துறை
## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை
## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (09.05.2026 முதல் 13.05.2026)

**அறிக்கை எண் 11/2026** **தேதி. 08.05.2026**

### கரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

கரூர் மாவட்டத்தின் 05.05.2026 முதல் 07.05.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 36 - 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 21 - 27 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 71 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 - 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசை வரை பதிவானது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை கரூர் (09.05.2026 முதல் 13.05.2026)

| கடந்த வார வானிலை (05.05.2026 முதல் 07.05.2026) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.05.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 05/05 | நாள்-2 06/05 | நாள்-3 07/05 | தேதி | நாள்-1 09/05 | நாள்-2 10/05 | நாள்-3 11/05 | நாள்-4 12/05 | நாள்-5 13/05 |
| 0 | 0 | 4.4 | மழை (மி.மீ) | 19 | 24 | 22 | 4 | 3 |
| 39 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 35 | 34 | 34 |
| 21 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 22 | 21 | 21 |
| 7 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 4 |
| 90 | 73 | 75 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 53 | 71 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 60 | 60 |
| 8 | 10 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 10 | 10 | 6 | 8 |
| கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு |

### கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 09.05.2026 முதல் 13.05.2026 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 - 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 24 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| நெல் | நாற்றாங்கால் | கோடை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும். |
| நெல் | நடவு வயல் | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை, மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும். |
| | | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். எனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**